

# அமெரிக்காவில் திருக்குறள் கட்டுரைப் போட்டி

-முனைவர் இர. பிரபாகரன்

ஒருங்கிணைப்பாளர், திருக்குறள் கட்டுரைப்போட்டி

இந்த ஆண்டு, அமெரிக்காவில் உள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக ஒரு திருக்குறள் கட்டுரைப் போட்டி வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம், அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் மற்றும் வாசிங்டன் வட்டாரத் தமிழ் இலக்கிய ஆய்வுக்கூட்டம் ஆகிய அமைப்புகளால் நடத்தப்பட்டது. அந்தப் போட்டியில் அமெரிக்காவின் பல மாநிலங்களிலிருந்து 42 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். அந்தப் போட்டிக்கு மாணவர்கள் தங்கள் கட்டுரைகளைத் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப 17 மாணவர்கள் தங்கள் கட்டுரைகளைத் தமிழிலும், 25 மாணவர்கள் தங்கள் கட்டுரைகளை ஆங்கிலத்திலும் எழுதி அனுப்பினார்கள்.

முனைவர் கலைச்செழியன் (சென்னை, தமிழ் நாடு), முனைவர் கண்ணபிரான் ரவிசங்கர் (ஆம்ஸ்ட்ர்டாம், நெதர்லாந்து) மற்றும் முனைவர் (திருமதி) சித்ரா மஹேஷ் (டல்லஸ், டெக்சாஸ் அமெரிக்கா) ஆகிய மூவரும் கட்டுரைகள் அனைத்தையும் படித்து மதிப்பெண்கள் வழங்கினார்கள். அந்த மதிப்பெண்களின் அடிப்படையில் பத்துக் கட்டுரைகள் சிறந்த கட்டுரைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. அடுத்து, அந்தப் பத்துக் கட்டுரை எழுதிய மாணவ மாணவிகளை, திரு. மணி மனிவண்ணன் (கலிஃபோர்னியா, அமெரிக்கா), திரு. இளங்கோவன் தங்கவேலு (மிசௌரி,அமெரிக்கா) மற்றும் திருமதி மேகலா

இராமமூர்த்தி (ஃபுளோரிடா, அமெரிக்கா)ஆகிய மூன்று நடுவர்களும் நேர்காணல் செய்தார்கள். அந்த நேர்காணலின் பொழுது, ஒவ்வொரு மாணவனும் (மாணவியும்) தங்கள் கட்டுரையில் உள்ள கருத்துக்களை ஐந்து மணித்துளிகளில் சொற்பொழிவாற்றினார்கள். அதன் பின்னர், திருக்குறளைப் பற்றி சில பொதுவான கேள்விகளும் அவர்களின் கட்டுரையைப் பற்றிப் பல நுணுக்கமான கேள்விகளும் கேட்கப்பட்டன. முதற்கட்டத் தேர்வு, சொற்பொழிவு, நேர்காணல் ஆகிய மூன்றிலும் மாணவ மாணவிகள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் பரிசுகளுக்குத் தகுதியான கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.



**செல்வி அத்விகா சச்சிதானத்தன் (மின்னசோட்டா) முதற்பரிசுக்கும் ($1,000);**



**செல்வி அவ்வை சந்திரசேகரன் ( சார்சியா) இரண்டாம் பரிசுக்கும் ($500);**



**செல்வி ஆர்த்தி பாலாசி (இல்லினாய்) மூன்றாம் பரிசுக்கும்;**

தகுதி உடையவர்களாக முடிவு செய்யப்பட்டது.

வெற்றி பெற்ற மாணவர்களையும் வழிநட்த்திய பெருமக்களையும் ஊக்கம் வழங்கிய பெற்றோர்களையும் “குறள்முழக்கம் “ வாழ்த்துகிறது.

அடுத்துவரும் ஆண்டுகளிலும் இதுபோன்ற திருக்குறள் கட்டுரைப் போட்டிகளைத் தொடர்ந்து நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதால் மாணவச்செல்வங்கள் தொடர்ந்து இத்தகைய போட்டிகளில் பங்கேற்று குறள்நெறி போற்றுமாறு வேண்டுகிறோம்.

# தமிழ் உரிமைப் போராளி,பேராசிரியர் சி.இலக்குவனாருக்குச் சிலை

-தமிழறிஞர்கள்,இலக்கிய மன்ற அமைப்பாளர்கள் வலியுறுத்தல்

தமிழக சட்டப்பேரவையில் செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையின்போது, அத்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். அதில், 'விடுதலைக்காகப் போராடிய தியாகிகள், மொழிப்போர்த் தியாகிகள், தலைசிறந்த இலக்கியப் படைப்பாளிகள், சமூக நீதிக்காகப் போராடியவர்கள், குடியரசு முன்னாள் தலைவர், திராவிட இயக்க முன்னோடிகள் ஆகியோரைப் போற்றும் வகையில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் திருவுருவச் சிலைகள் நிறுவப்படும்' என்று தெரிவித்தார். அதன்படி,. அப்துல் கலாம், ரவீந்திரநாத் தாகூர், மருது சகோதரர்கள், ப. சுப்பராயன், மு.வரதராசனார், முத்துலட்சுமி ரெட்டி, மூவலூர் ராமாமிர்தம் அம்மாள், கடலூர் அஞ்சலை அம்மாள் உள்ளிட்டோருக்கு சிலை அமைக்கப்படும் என்ற தமிழ்நாட்டு அரசின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

இச் சூழலில், காலமெல்லாம் தமிழுக்குப் போராடி, இன்றுவரை எவ்வகையிலும் போற்றப்படாத இலக்குவனார்க்குச் சிலை நிறுவ வேண்டும் எனத் தமிழறிஞர்கள், இலக்கிய மன்ற அமைப்பாளர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சமூக வலைத் தளங்களிலும் சுட்டுரை மூலமாகவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## கு.சிவமணி

'செந்தமிழ் அரிமா சி. இலக்குவனார்க்கு சிலை எடுப்பது இந்த அரசின் நன்றிக்கடன்.' 'என மேனாள் கரந்தைத் தமிழ்க் கல்லூரி முதல்வரும் சிறந்த மொழிபெயர்ப்பாளர்களுள் ஒருவருமாகிய பேராசிரியர் கு.சிவமணி தெரிவித்துள்ளார்.

## துரை. குணசேகர்

'முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஆசிரியர், இந்தி எதிர்ப்புப்போரை மாணவர்களை வைத்துக்கொண்டு முறையாக நடத்தித்தமிழ்காத்த பேராசான், எந்தச்சூழலிலும் தமிழ்வளர்ச்சிக்கு எதிராக இருப்பவர் எவராக இருப்பினும் தட்டிக் கேட்கத் தயங்காதவர், உடல், பொருள் அனைத்தையும் தமிழுக்காக ஈந்த தமிழ்ப்போராளி தமிழ் அரிமா முனைவர் சி.இலக்குவனாருக்குச் சிலை எழுப்புவது தமிழாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் திரு *ஸ்டாலின்* ஆட்சிக்காலத்தின் தலையாய கடமை என்று தமிழ் ஆராய்ச்சியாளர் பேரவை கருதுகிறது.ஆவன செய்யுமாறு பேரவைசார்பில் வேண்டுகிறேன்.' எனத் தமிழ் ஆராய்ச்சியாளர் பேரவைத் தலைவர் முனைவர் துரை.குணசேகர் மாண்புமிகு முதல்வருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஆவுடையப்பன் நடராசன்

தமிழ்நாட்டு அரசு பொது நூலக இயக்ககத்தில் இயக்குநராகப் பணியாற்றிப் பணிநிறைவு பெற்ற ஆவுடையப்பன் நடராசன் 'ஐயா இலக்குவனாரின் தமிழ்த் தொண்டுகளை அரசு கவனத்தில் கொண்டு அவர்களின் திருஉருவச் சிலையை நிறுவிச் சிறப்பு செய்ய வேண்டும்.' என வேண்டியுள்ளார்.

## சிற்பி பாலசுப்பிரமணியம்

சாகித்திய அக்காதெமித் தமிழ்ப் பிரிவுத் தலைவரும் முன்னணித் தமிழ்க் கவிஞர்களுள் ஒருவருமாகிய சிற்பி பாலசுப்பிரமணியம், 'இலக்குவனார்க்குச் சிலை நிறுவுதல் தக்கவர்க்குத் தக்க சிறப்புச் செய்வதாக அமையும்' எனக் கருத்துரைத்துள்ளார்.

பச்சையப்பன் கல்லூரி மேனாள் முதல்வர்கள் பேரா. **ப.அர.அரங்கசாமி**, பேரா. **தெ.ஞானசுந்தரம்** ஆகியோரும் இலக்குவனார்க்குச் சிலை நிறுவுதல், அவரின் தன்னிகரில்லாத் தமிழ்த் தொண்டுக்குச் செய்யும் சிறப்பாக அமையும் எனக் கருத்துரைத்துள்ளனர்.

புதுவைப் பாவலர் **இளமுருகன் சானகிராமன்**, நெய்வேலி சவகர் கல்லூரி மேனாள் முதல்வர் **முனைவர் மருதூர் அரங்கராசன்**, முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. அவர்களின் பேரனும் தமிழகப் புலவர் குழுவின் பொருளாளருமாகிய **தமிழ்ச்செல்வம்**, கவிஞர் **ஓசூர் மணிமேகலை**, எழுத்தாளர் **இராசேசுவரி செல்லையா**, **திருக்குறள்புலம் திருவள்ளுவர்**, எழில்கலைமன்றத்தின் தலைவர் **பாவலர் வேணு குணசேகரன்**, தில்லித் தமிழ்ப் பேராசிரியர் **கோவிந்தசாமி இராசகோபால்**, எழுத்தாளர் **திருமதி இந்திரா சவகர்**, ஊடகவல்லுநர் **திருமதி இந்திரா பக்கிரிசாமி** ஆகியோர் இலக்குவனார்க்குச் சிலை நிறுவுதல் வேண்டும் எனச் சமூக வலைத்தளத்தில் கருத்துரைத்துள்ளனர்.

## புதுக்கோட்டைத் திலகவதி ஆதீன கர்த்தர் அருள்நிறை தயானந்தசேகரன் அவர்கள்

'மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இக்கோரிக்கையை நிறைவேற்றி தமிழறிஞர்களின்

மனங்களை மகிழச் செய்ய வேண்டுகிறோம். இது குறித்து கனிவோடு உரிய முறையில் பரிசீலிப்பார் எனவும் நம்புகிறோம்.

மொழியுரிமை காக்கப் போராடியதால் இந்தியப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒரே பேராசிரியர் சி.இலக்குவனார்க்குச் சிலை நிறுவ அன்புடன் வேண்டுகிறேன்

காலமெல்லாம் தமிழுக்குப் போராடி இன்றுவரை போற்றப்படாத இலக்குவனார்க்குச் சிலை நிறுவ அன்புடன் வேண்டுகிறேன்.' என அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தமிழவேள் உமாமகேசுவரர் மரபுவழிப் பேரன் முனைவர் த.கு.திவாகரன்,

'தமிழக அரசுக்கு வேண்டுகோள்' 'என்னும்தலைப்பில் 'தமிழ்ப்போராளி, தி.மு.க ஆட்சி அரியணைக்கு வரவேண்டுமென தன்னந்தனியாக தமிழகம் முழுவதும் பரப்புரை செய்தவர் பேராசிரியர் சி. இலக்குவனார், இந்தி திணிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டதற்கு கடுமையான சட்டப்பிரிவில் கைது செய்யப்பட்டு சிறையிலிருந்து வெளியே வந்த பிறகும் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்ட ஒரே தமிழ்ப்போராளி பேராசிரியர் இலக்குவனார். முத்தமிழறிஞர் கலைஞரின் ஆசிரியர். திருக்குறளை கற்பிக்க தமிழகமுழுவதும் சென்று தன் வாழ் நாள்முழுவதும் உழைத்தவர். இலக்குவனார், ஓர் தமிழ்ப் போராளியாகவே வாழ்ந்து மறைந்தவர். இவருக்குச் சிலை நிறுவிட தமிழக அரசு ஆணையிடவேண்டும். திமுக அரசுமட்டும் தான் இவரது ஆற்றலை தொண்டை நினைவு கூர்ந்து சிலை அமைக்க ஆணையிடமுடியும். விரைவில்

இதற்கான உத்தரவை எதிர்பார்த்து காத்திருக்கின்றோம். 'என்று கருத்துரைத்துள்ளார்.

## மயிலாடுதுறைப் பேராசிரியர் துரை.குணசேகரன்

'இலக்குவனார் ஐயாவிற்குச்சிலை என்பது தமிழ்ப்போராளிக்குச் செலுத்தும் மரியாதை, தன்குடும்பம் தன்பிள்ளை தன் சொத்து என்று பாராமல் தமிழ்தான் எல்லாம் என்று வாழ்ந்து மறைந்த பெருந்தகையாளருக்குச் செய்யும்மரியாதை தமிழ்நாட்டரசு நிச்சயம் செய்யும்' என்று தமிழுணர்வாளர்கள் நம்புகின்றனர்

## செ.வ.இராமாநுசன்

மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, பணிவான வேண்டுகோள்!

நற்றமிழ் அறிஞர், செந்தமிழ்ச் சான்றோன் சி.இலக்குவனார் அவர்களுக்கு தமிழ்நாட்டில் சிலை அமைத்து இளைஞர்களுக்கு மொழித் தொண்டின் பெருமையை விளக்க வேண்டுகிறேன்.

நன்றி ஐயா!

தங்கள் உண்மையுள்ள
செ.வ.இராமாநுசன்,
சென்னை-600074.

உள்ளிட்ட பலர் வேண்டுகோள் அனுப்பியுள்ளனர்.

தமிழ் வளர்ச்சி மன்றம், சிட்னி
**TAMIL VALARCHI MANRAM Inc.**
15 Station Street,
Wentworthville, NSW 2145 Australia
Email: tamilvalarchimanram@gmail.com
ABN: 75 234 692 893


செப்டம்பர் 9, 2021

மாண்புமிகு மு. க. ஸ்டாலின் அவர்கள்

தமிழக முதல்வர்

வணக்கம் ஐயா.

**பேராசிரியர் சி. இலக்குவனார் சிலை நிறுவல் தொடர்பாக**

தமிழுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் நீங்கள் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்ற இந்தப் பொன்னான தருணத்தில் உங்களைப் பாராட்டி மகிழ்கிறோம். தங்களின் அந்த முயற்சிகளின் தொடர்ச்சியாக, தமிழுக்காவே தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு, பல செய்தி இதழ்களையும், எண்ணற்ற நூல்களையும் தமிழில் படைத்துத் தந்துள்ள தமிழறிஞர், தமிழுக்காகச் சிறை சென்ற பேராசிரியர் சி. இலக்குவனார் ஐயா அவர்களுக்கு சிலை நிறுவி அவர் பெயர் தமிழர் சரித்திரத்தில் நிலைபெறச் செய்யவேண்டுமென்பது புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் ஆவலாக உள்ளது. மேலும், இன்றைய இளைய தலைமுறையினர் அவரைப்போன்றத் தமிழ்ச் சான்றோர்களை அறிந்துகொள்ளும் முகமாக தமிழக அரசு அவருக்கு சிலை ஒன்று அமைத்துப் பெருமை சேர்த்திட வேண்டுமென்று எங்கள் மன்றத்தின் சார்பாக தங்களை அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றியுடன்,

61 423 515 263

அன்பு ஜெயா, நிறுவனர்

(Mr Anbu Jaya – anbujaya2005@yahoo.com.au)

6:02

அனுப்புநர்: Marumalarchchimantram Trust
மறுமலர்ச்சிமன்றம் நம்பிக்கை
<marumalarchy1972@gmail.com>
Date: வியா., 9 செப்., 2021, பிற்பகல் 5:41
Subject: பேராசிரியர் இலக்குவனாருக்குச் சிலை வைக்க கோரல்... தொடர்பாக
To: <cmcell@tn.gov.in>

பெறுநர்:

மாண்புமிகு முதலமைச்சர்,
தமிழ்நாட்டரசின் தலைமைச் செயலகம்,
முதலமைச்சரின் தனிப்பிரிவு,
புனிதஜார் கோட்டை, சென்னை 600009

ஐயா,

பொருள்: பேராசிரியர் இலக்குவனாருக்குச் சிலை வைக்க கோரல்... தொடர்பாக

வணக்கம்.

தமிழ் ஆளுமைகளுக்குச் சிலைகள் வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருவதற்கு
ஈழத் தமிழர் சார்பில் எமது நன்றி.
ஈழத்து ஏதிலிகளுக்கான ஆக்கபூர்வமான உங்கள் முடிவுகளுக்கும் நன்றி

தமிழ் ஆளுமைகளுள் முதன்மையான இடத்தை வகிப்பவரும் முத்தமிழ் அறிஞர்
டாக்டர் கலைஞர் அவர்களின் ஆசிரியருமான 'செந்தமிழ் அரிமா'. 'தமிழ்ப் போராளி', பேரா. முனைவர்

சி. இலக்குவனார்

அவர்களுக்கும் தக்க இடத்தில் சிலைவைக்க வேண்டும் என்று ஈழத்திலிருந்து
வேண்டுகின்றேன்.

நன்றி

அழ. பகீரதன்
(ஆசிரியர், 'எங்கள் முற்றம்' மாத இதழ்
பொருளாளர், மறுமலர்ச்சி மன்றம் அறக்கட்டளை,
ஓய்வுநிலை வங்கியாளர்,
சென்னை மாநிலக் கல்லூரி பழைய மாணவன்)

சிங்கப்பூர்
காடு கிரியேசன்ஸ்
வழங்கும்

# மக்கள் மனம்

மக்கள் கலை இலக்கிய இதழ்

ஆசிரியர்:
பிச்சினிக்காடு இளங்கோ

KAADU CREATIONS :
Reg No. 53393581D

PERMIT NUMBER:
MCI(P)033/05/2020

நாள் : **10.09.2021**

**தமிழ்தான் தமிழரின் முகவரி!**

மாண்புமிகு தமிழ்நாட்டின் மக்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வணககம்,

தாங்கள் ஆட்சிக்கு வந்த நாள் தொட்டு எல்லாச் சிந்தனைகளும், செயல்களும் தமிழ் முன்னேற்றம், தமிழர் முன்னேற்றம் என்பதறிந்து சிங்கப்பூரில் வாழும் தமிழ் உணர்வாளர்கள் நாங்கள் மகிழ்சிறோம்; பாராட்டுகிறோம்; வாழ்த்துகிறோம்.

தமிழுக்காக வாழ்ந்து மறைந்த தமிழ்ப் போராளி இலக்குவனார் அவர்கள் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு ஆசிரியர் என்பதை அறிந்து மகிழ்கிறோம்.

சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் எங்கள் 'மக்கள் மனம்' இதழில் அவரைப் பற்றி ஒரு நீண்ட கட்டுரை வெளியிட்டிருக்கிறோம்.

தமிழை வைத்துப் பிழைக்காமல் தமிழுக்காக பல்வேறு இழப்புகளைச் சந்தித்த பேராசிரியர் இலக்குவனார் உங்கள் கவனத்திற்கு வரவேண்டிய பேராசிரியர்.

செய்வன எல்லாம் சீர்தூக்கிச் செய்யும் நீங்கள் தமிழ்ப் போராளியாக வாழ்ந்து மறைந்த பேராசியரிருக்கு ஒரு நினைவுச்சின்னம் எழுப்ப வேண்டும் என்பது எங்கள் அவா.

பேராசிரியர்கள் தமிழால் வாழ்ந்திருக்கிறார்கள். தமிழுக்காக வாழ்ந்த பேராசிரியர் என்றால் அவர் ஐயா இலக்குவனார் தான்.

உங்களுடைய சாதனை வரிசையில் ஐயா இலக்குவனார் நினைவுச்சின்னம் இடம்பெற வேண்டி நினைவுப்படுத்தி விடைபெறுகிறோம்,

இப்படிக்கு.

10/9/2021

**பிச்சினிகாடு இளங்கோ**
ஆசிரியர் - மக்கள் மனம்,
கவிமாலை நிறுவனர் - சிங்கப்பூர்
81316437
Kaaducreations@gmail.com

ஆத்திரேலியாவிலிருந்து சிட்னி தமிழ்வளர்ச்சி மன்றத்தின் நிறுவனர் முனைவர் அன்புசெயா அவர்களும் ஈழத்திலிருந்து மறுமலர்சி மன்றம் அறக்கட்டளைப் பொருளாளர் அழ.பகீரதன் அவர்களும், சிங்கப்பூர் மக்கள் மனம் ஆசிரியர் பிச்சினிகாடு இளங்கோ அவர்களும் முதல்வருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (படங்கள்: மேலே)

## மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சுட்டுரை (Tweet) மூலமும் வேண்டுகோள் தெரிவிக்கப்பட்டுள்ளது.


Kalai Chezhian 9:16 am
to cmcell

மாண்பமை, தமிழ்நாட்டு முதல்வர் அவர்களுக்கு வணக்கம்.
தாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், தமிழறிஞர்களுக்கான முதன்மைத்துவம் கூடிவிட்டது. இவ்வாறு சுட்டுமளவில் தங்கள் உள்ளம் அவர்கள்பால் இருப்பது மகிழ்வையும் நிறைவையும் தருகிறது.
இந்நிலையில், வேண்டுகோள் ஒன்று விடுக்கிறேன். மொழிக்காப்புப் போராளி, தமிழ்க் களப்பணியாளி, தனித்தமிழ் உணர்வாளி, உண்மை கண்டுரைத்த ஆய்வாளி, பொதுநல வாழ்வாளி, தடைகடந்த கொள்கைப் பிடிப்பாளி எனத் தமிழ்நாட்டு வரலாற்றில் ஒளிர்ந்து மிளிரும் பேராசிரியர் சி. இலக்குவனாருக்குச் சிலை நிறுவுமாறு அன்புடன் வேண்டுகிறேன். அச்சிலையை ஒட்டி 'இலக்குவனார் தமிழ்க்களப்பணிக் கூடம்' அமைக்கவும் வேண்டுகிறேன்.
களப்பணியாற்ற விரும்பும் இளந்தலைமுறை யாவருக்கும், இலக்குவனார் சிலையும் களப்பணிக் கூடமும் வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் அமையும் என்பதில் ஐயம் இல்லை. இவ்வேண்டுகோளைக் கனிவுடன் கருத்தில் கொண்டு, அன்னார்க்கு அரசு அங்கீகாரம் வழங்கி ஆட்சிக்குக் கூடுதல் பெருமை சேர்க்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.
எழுச்சியுடன்,
கவனகர் கலை. செழியன்

'இந்தித்திணிப்பை எதிர்த்த ஒரே குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டுப் பிணை பெற்றபின் இரண்டு மாத காலத்திற்கு நாள்தோறும் காவல்நிலையம் சென்று கையெழுத்துப் போட்டுவந்த ஒரே பேராசிரியர் சி.இலக்குவனார்க்குச் சிலை நிறுவ அன்புடன் வேண்டுகிறேன்.'

'அனைத்து மாணவர்களும் திருக்குறளைத் தவறாது பயில அரசு ஆணையிட வேண்டுமென வலியுறுத்திக் கல்வி நிலையங்களில் குறள்பரவ வழிவகை செய்த சி.இலக்குவனார்க்குச் சிலை நிறுவ அன்புடன் வேண்டுகிறேன்.

'

'திருக்குறள் மாநாடு நடத்துமாறு தந்தை பெரியாரால் கேட்டுக்கொள்ளப்பட்டு விருதுநகரில் 1949-இல் சிறப்பாக நடத்திய சி.இலக்குவனார்க்குச் சிலை நிறுவ அன்புடன் வேண்டுகிறேன்.'

'தமிழ்ப் பெண்களைத் தரக்குறைவாகப் பேசிய அன்றைய சென்னை மாகாண ஆளுநரின் செயலைக் கடிந்துரைத்த நக்கீரர் சி.இலக்குவனார்க்குச் சிலை நிறுவ அன்புடன் வேண்டுகிறேன். '







'இலக்கியத்துக்காகக் குறுக்கெழுத்துப் போட்டி நடத்திப் பரிசு வழங்கிய ஒரே இலக்கிய இதழாகிய "இலக்கியம்" நடத்திய சி.இலக்குவனார்க்குச் சிலை நிறுவ அன்புடன் வேண்டுகிறேன். '

'தனித்தமிழில் நாளிதழ் ஆறு திங்கள் நடத்திய ஒரே பேராசிரியர் சி.இலக்குவனார்க்குச் சிலை நிறுவ அன்புடன் வேண்டுகிறேன். '

'குறள்நெறி எனும் இதழைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடத்தித் திருக்குறள் பரப்புரை செய்த சி.இலக்குவனார்க்குச் சிலை நிறுவ அன்புடன் வேண்டுகிறேன்.'

'வாழ்நாளெல்லாம் வள்ளுவர்நெறியைப் பரப்புரை செய்த சி.இலக்குவனார்க்குச் சிலை நிறுவ அன்புடன் வேண்டுகிறேன்.'

'முதன்முதலாகச் சங்க இலக்கியம் எனும் தலைப்பில் வாரவெளியிடு நடத்திச் செம்மொழிமாண்பை மக்களுக்கு உணர்த்திய சி.இலக்குவனார்க்குச் சிலை நிறுவ அன்புடன் வேண்டுகிறேன். '

'தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட இலக்குவனார்க்குச் சிலை நிறுவவேண்டுகிறேன். '

என்னும் வாசகங்கள் சுட்டுரையில் இடம்பெற்றுள்ளன.

## திரு . நல்லதம்பி

வணக்கம்.
தமிழக முதல்வர் அவர்களின் அன்பான கவனத்திற்கு,

'பேராசிரியர் சி.இலக்குவனார் சங்க இலக்கியம், திராவிடக்கூட்டரசு ,குறள்நெறி என வாழ்நாளெல்லாம் முழங்கினார். கலைஞரின் நண்பர். அப்பெருந்தகைக்குச்சிலையும் மணிமண்டபமும் அமைப்பது சாலச்சிறந்தது. தாங்கள் அன்பு கூர்ந்து கவனிக்கும்படி வேண்டுகிறேன்.'

- நல்லதம்பி, மூத்த தொலைக்காட்சியாளன்

சிங்கப்பூர், மலேயா, அயர்லாந்து, அமெரிக்கா எனப் பல நாடுகளிலிருந்தும் தமிழ் அமைப்புகளும் ஆர்வலர்களும் முதல்வருக்குச் சுட்டுரை அனுப்பியுள்ளனர். அவை குறித்த விவரங்கள் வந்ததும் தொகுத்து அடுத்த இதழில் தெரிவிக்கிறோம்.

தமது தன்னிகரில்லாத் தமிழ்நலத் திட்டங்களின் மூலம், பத்தாண்டுக் காலத்திற்குப் பிறகு மீண்டும் ஒரு தமிழ் மறுமலர்ச்சி ஏற்படுத்திவரும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ் வேண்டுகோளை நிறைவேற்றுவார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**உலகத் திருக்குறள் இணையக்கல்விக்கழகம்** வெளியிடும் செய்திமடல் (திங்கள்தோறும் பத்தாம்நாள் வெளிவருகின்றது.)

வள்ளுவர் குறளை வையகமெங்கும் பரப்புவது நம் கடமை. அதனைப் போன்றே வையகமெங்கும் நடக்கும் திருக்குறள் தொடர்பான நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி ஓர் இதழ் மூலமாகத் தமிழ்மக்கள் அனைவரும் அறியும்வண்ணம் வழங்குவதும் இன்றியமையாததே.உலகையே சுருட்டி சட்டைப்பையில் இருக்கும் கைப்பேசி வழியாக அறிமுகப்படுத்தும் இணையமும் புலனமும் நமக்கு இப் பணியில் துணைநிற்கும்போது நாம் வாளா இருக்கலாமா?

ஆங்கிலத் திங்கள்தோறும் பத்தாம் நாள் உலகத் திருக்குறள் இணையக் கல்விக் கழகத்தினால் வெளிவரும் இந்த செய்திமடல் உங்களுக்கானது.நீங்கள் உலகின் எந்த மூலையிலிருந்தாலும் உங்கள் பகுதியில் நிகழும் குறள் தொடர்பான நிகழ்ச்சிகளை எங்களுக்கு எழுதியனுப்புங்கள்.வழமையான ஒருங்குறி (யூனிகோடு) அச்சுருக்களைப் பயன்படுத்தி சொல் கோப்புகளாக (MS Word) arial@kuralvirtual.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.படங்கள் இருப்பின் அவற்றையும் தனியே படக்கோப்புகளாக அனுப்புங்கள்.

குறளைப் பரப்பும் பணியில் முனைந்துள்ள அமைப்புகளையும் சான்றோர்களையும் பற்றி எமக்குத் தெரிவியுங்கள்.அவ் விவரங்கள் வெளிவந்தால் குறள் பரப்பும் பணிக்கு அறிந்தேற்பு வழங்கிய நிறைவு நம் அனைவருக்குமே ஏற்படும் அன்றோ?

இணையவழி இலவசத் தனிச்சுற்றுக்கு விற்பனைக்கு அல்ல.